செய்தி வெளியீட்டு எண்: 257 நாள்: 23.03.10

## உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

தமிழ்நாடு அரசு, சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம்பருப்பு போன்ற பருப்பு வகைகள் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகம் செய்து வருகிறது . இருப்பினும் மொத்த விலை குறைந்த போதிலும் சில்லறை விலை குறையவில்லை என்பதை கருத்தில் கொண்டும் மக்களின் கூடுதல் தேவையை இன்னும் முழுமையாக பூர்த்தி செய்யவும் வசதியாக கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் நடத்தும் 200 கூட்டுறவு அங்காடிகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் நடத்தும் 21 அமுதம் பல் பொருள் அங்காடிகள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் நடத்தும் 295 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் மூலமாக துவரம்பருப்பு முதல் ரகம், துவரம் பருப்பு 2–ம் ரகம், கனடா பருப்பு மற்றும் உளுத்தம்பருப்பு பருமன் மற்றும் உளுத்தம்பருப்பு நடுத்தரம் ஆகியவற்றை சிறப்பு விற்பனை பிரிவுகள் மூலமாக பொது மக்களின் நலன் கருதி கட்டுப்பாடில்லாத பொருளாக அடக்க நியாய விலையில் விற்பனை செய்ய அரசு தீர்மானித்தது. அதன்படி 27.01.2010 முதல் இச்சிறப்பு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டம் துவங்கியது முதல் இச்சிறப்பு விற்பனை மூலம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மற்றும் கூட்டுறவு சிறப்பு விற்பனை நிலையங்கள் மூலம் தினமும் துவரம்பருப்பு வகைகள் சராசரி முறையே 1–டன் மற்றும் 5–டன் என்ற அளவில் 18.03.2010 வரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் 26–டன் மற்றும் கூட்டுறவு சிறப்பு நிலையங்கள் 299–டன் துவரம் பருப்பு வகைகள் விற்பனை செய்துள்ளன. அதே போன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் உளுத்தம்பருப்பு வகைகள் தினமும் சராசரி 1 குவின்டால் மற்றும் 10 குவின்டால் என்ற அளவில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூன்று டன் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் 24 டன் உளுத்தம்பருப்பு வகைகள் விற்பனை செய்துள்ளன. இச்சிறப்பு விற்பனை மூலம் வெளிச்சந்தை சில்லறை விலை ஓரளவு கட்டுப்பாட்டில் உள்ளது. 08.03.2010 முதல் விலை மறுநிர்ணயம் செய்யப்பட்டு கீழ் வரும் விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த விலைகள் இந்த வாரமும் மாற்றம் இல்லாமல் தொடரும்.

| துவரம் பருப்பு வகைகள் | | |
|---|---|---|
| 1. | துவரம்பருப்பு முதல் ரகம் | கிலோ ரூ.60/– |
| 2. | துவரம்பருப்பு 2–ம் ரகம் | கிலோ ரூ.55/– |
| 3. | கனடா பருப்பு | கிலோ ரூ.47/– |
| **உளுத்தம் பருப்பு வகைகள்** | | |
| 1. | உளுத்தம் பருப்பு (பருமன்) | கிலோ ரூ.55/– |
| 2. | உளுத்தம் பருப்பு (நடுத்தரம்) | கிலோ ரூ.53/– |

- ❖ இந்த பருப்புகள் வாங்க குடும்ப அட்டை தேவையில்லை
- ❖ தேவைக்கேற்ப எவ்வளவு வேண்டுமானலும் வாங்கிக் கொள்ளலாம்

மேற்கண்டவாறு பருப்பு வகைகள் கிடைப்பதில் ஏதேனும் சிரமங்கள்/புகார்கள் இருப்பின் கூட்டுறவு கடைகளை பொருத்தளவில் தொலைபேசி எண் 044–28364858 மற்றும் அமுதம் அங்காடிகளை பொருத்தளவில் தொலைபேசி எண் 28351514–ல் தகவல் தெரிவிக்கலாம்.

ஒம்/– க.ராஜாராமன்
ஆணையாளர்

ஆணையாளருக்காக.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**